

NOAS

பதினெட்டு வயதிற்குட்பட்ட பாதுகாவலரற்ற புகலிட விண்ணப்பதாரிகளுக்கான தகவல்

15 மற்றும் 18 வயதிற்கு இடைப்பட்டோருக்கானது

நீங்கள் பதினெட்டு வயதிற்குட்பட்டவரா? நீங்கள் நோர்வேயில், புகலிடம் கோரி அதாவது அகதியென உங்கள் பெற்றோர் அல்லது ஏனைய பராமரிப்பாளர்களின் துணையின்றி வந்துள்ளீர்களா? அப்படிப்பட்ட உங்களை நாம் பாதுகாவலின்றி வந்த பதினெட்டு வயதிற்குட்பட்ட புகலிட விண்ணப்பதாரி என்று அழைப்போம்.

நோர்வேயில் பாதுகாப்புக் கோரி நீங்கள் விண்ணப்பிக்கும் போது நிகழ்வது என்ன? பதினெட்டு வயதிற்குட்பட்ட புகலிட விண்ணப்பதாரி என்ற வகையில் உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் எவை என்பது பற்றிய தகவலகளை இக்கையேடு வழங்கும்.

உங்கள் தாய்நாட்டில் இருக்கும் உங்களது குடும்பத்தைப் பற்றி:

உங்களது குடும்பத்தினர் எங்கு வசிக்கிறார்கள் என UDI இற்கு தெரியாவிடில், அவர்கள் குடும்பத்தைத் தேடலாம். உங்கள் குடும்பத்தைப் பற்றி நீங்கள் தெரிவிப்பது முக்கியம்

உங்கள் குடும்பத்தைப் பற்றியும் அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்பது பற்றியும் நீங்கள் தெரிவிப்பது முக்கியமாகும்.

UDI உங்கள் குடும்பத்தை தேடும்.

1. பாதுகாப்பு பெறும் உரிமை யாருக்குண்டு?

- நீங்கள் தாய்நாட்டிற்கு மீள் பயணம் செய்வதால் பாரதூரமான அத்துமீறல்கள் அல்லது சித்திரவதைக்குள்ளாக்கப்படுதல் இல்லையேல் கொலை செய்யப்படக்கூடிய ஆபத்தைக் கொண்டுள்ளீர்கள் என்றால், நீங்கள் பாதுகாப்பைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளீர்கள்.
- உங்கள் தாய்நாட்டின் அதிகாரிகள் உங்களுக்கு பாதுகாப்பு வழங்கினால் அல்லது உங்கள் தாய்நாட்டில் பாதுகாப்பான பிராந்தியங்கள் இருந்தால் வழமையாக நோர்வேயில் பாதுகாப்பைப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்காது.
- பராயமடைந்த ஒருவரை விட பதினெட்டு வயதிற்குட்பட்ட புகலிடவிண்ணப்பதாரிக்கு நோர்வேயில் பாதுகாப்பைப் பெறுவதற்கான கோரிக்கைகள் குறைவாக இருக்கும்.
- பாதுகாப்புப் பெறும் உரிமையை யார் கொண்டுள்ளனர் என்ற தீர்மானம் சர்வதேச ஒப்பந்தங்களால் வரையறுக்கப்பட்டுள்ளதோடு இவற்றைப் பின்பற்றும் கடமையை நோர்வே கொண்டுள்ளது.

2. மனிதாபிமான அடிப்படையில் யாருக்கு தங்கும் அனுமதி கிடைக்கலாம்?

- பாதுகாப்பைக் கோரும் உரிமை உங்களுக்கு இல்லாவிடின், வலுவான மனிதாபிமான காரணங்கள் அல்லது நோர்வேயில் நீங்கள் கொண்டுள்ள விசேட தொடர்புகள் காரணமாக உங்களுக்கு தங்கும் அனுமதி வழங்குவதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளீர்களா என அதிகாரிகள் பரிசீலிப்பார்கள்.

3. மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் அனுமதி யாருக்கு வழங்கப்படுகிறது?

- உங்களை தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புவதால் உங்களுக்கு தகுந்த பராமரிப்பு கிடைக்குமா என UDI ஐயம் கொண்டிருப்பதுதான் இந்நாட்டில் நீங்கள் தங்குவதற்கான ஏக காரணமாக இருக்குமெனில் உங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் அனுமதி வழங்கப்படலாம். UDI உங்கள் விண்ணப்பத்தை பரிசீலனை செய்யும் பட்சத்தில் நீங்கள் 16 வயதுதைப் பூர்த்தி செய்திருந்தால் இது செல்லுபடியாகும்.
- இவ்வாறான அனுமதி நீங்கள் 18 வயதை அடையும் வரை செல்லுபடியாகும்.
- இவ்வாறான அனுமதியைப் புதுப்பிக்க முடியாது. அத்தோடு உங்கள் குடும்பம் நோர்வேயிற்கு வருவதற்கான அனுமதியையும் இது வழங்காது.

4. உங்கள் புகலிட விண்ணப்பம் எந்த நாட்டில் பரிசீலிக்கப்படும்?

- நோர்வேயில் புகலிடவிண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் அனைவரது விண்ணப்பங்களும் நோர்வேயில் பரிசீலிக்கப்படுவதில்லை. டப்ளின் ஒப்பந்தமானது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான கூட்டுப்பணியாகும். இதன்படி உங்களது விண்ணப்பம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு நாட்டில் மட்டுமே கையாளப்படும்.
- நோர்வேயிற்கு வருமுன் வேறொரு ஐரோப்பிய நாட்டில் நீங்கள் பாதுகாப்புக் கோரியிருந்தால், அல்லது உங்கள் பெற்றோர் அல்லது வளர்ப்புபொறுப்பைக் கொண்ட யாராவது வேறு நாட்டில் இருந்தால், உங்களது விண்ணப்பத்தை அந்த நாட்டில் கையாள்வதற்காக நோர்வே அரசாங்கம் உங்களை அந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கலாம்.
- நீங்கள் வேறொரு நாட்டில் பாதுகாப்புக் கோரியிருந்தால் உதாரணமாக உங்கள் கைஅடையாளத்தை எடுப்பதன் மூலம் இதை நோர்வே அதிகாரிகள் அறிந்து கொள்ளலாம்.

- நோர்வே அதிகாரிகள் உங்களை பிற நாடொன்றிற்கு அனுப்பும் பட்சம் இதையிட்டு நீங்கள் மேன்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமையுண்டு. இது பற்றி மேலதிகமாக உங்கள் வழக்கறிஞர் உதவுவார்.

- நீங்கள் ஒரு பிற ஐரோப்பிய நாட்டில் பாதுகாப்புக் கோரி விண்ணப்பத்திருந்தால், இது விடயமாக NOAS உடனான உரையாடலின் போது நீங்கள் கூறினால் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

5. உங்கள் புகலிட விண்ணப்பத்தை நோர்வேயில் பரிசீலிப்பது யார்?

வெளிநாட்டவர் விவகார ஆணையகம்(UDI) ஆனது நோர்வே அரசின் ஒரு அங்கமாகும். இவர்கள் உங்களுடன் நேரடி சந்திப்பில் உரையாடி உங்களுக்கு தங்கும் அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள். UDI அனைத்து புகலிட விண்ணப்பங்களையும் நுணுக்கமாகவும் தனிப்பட்ட ரீதியிலும் பரிசீலனை செய்யும்.

6. நீங்கள் பாதுகாப்பக்கோரி விண்ணப்பிக்கும் போது என்ன நிகழ்கிறது?

புகலிட விண்ணப்பதாரியென பொலிசில் நீங்கள் பதிவு செய்து கொள்வீர்கள்

- பொலிசார் உங்கள் புகைப்படம் மற்றும் கைரேகையை எடுப்பார்கள். நீங்கள் யார், எவ்வாறு நோர்வேயிற்கு வந்தீர்கள் என்பது போன்ற விடயங்களை விசாரிப்பார்கள்.

- உங்களிடம் கடவுச்சீட்டு அல்லது நீங்கள் யார் என்பதை சொல்லவல்ல வேறு ஆவணங்கள் இருப்பின், நீங்கள் இவற்றை பதிவு செய்யும்போது வழங்குவது முக்கியம்.

நீங்கள் ஓர் அகதிமுகாமிற்கு இடம் மாறுவீர்கள்

- பதிவிற்கு பின்னர் நீங்கள் ஆரம்ப காலத்தில் தங்கியிருப்பதற்கான பதினெட்டு வயதிற்குட்பட்ட பராமரிப்புத் துணையற்ற புகலிடம் கோருவோருக்கான முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- பின்னர் வேறொரு முகாமிற்கு இடம் மாற்றப்படுவீர்கள்.
- நீங்கள் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால், 3 மாதங்களுக்கு மேல் நோர்வேயில் தங்க வேண்டிய சாத்தியக்கூறு இருக்குமானால் நீங்கள் பாடசாலைக்கு செல்லும் உரிமையும் கடமையையும் கொண்டுள்ளீர்கள். நீங்கள் 16 இலிருந்து 19 வயதிற்கு இடைப்பட்டவராயின், நீங்கள் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்படலாம், ஆனால் இதற்கு நீங்கள் கடமைப்பட்டவரல்ல.
- உங்களுக்கு ஏதாவது சிரமங்கள் இருந்தால் முகாமிலுள்ள ஊழியர்களுடன் நீங்கள் உரையாடுவது முக்கியம். நீங்கள் கூறுபவற்றை அவர்கள் செவிமடுத்து உங்களுக்கு தேவையெனில் உதவி வழங்குவார்கள். உங்களது நாளாந்தப் பராமரிப்பிற்கான பொறுப்பை முகாமிலுள்ள ஊழியர்கள் கொண்டுள்ளனர்.

நீங்கள் காச நோய் பரிசோதனைக்குட்படுத்தப்படுவீர்கள்

- அகதிமுகாமிலுள்ள ஆரம்ப நாட்களில் நீங்கள் காசநோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவீர்கள். இது அனைவருக்கும் கட்டாயமான ஒன்று. உங்களுக்கு காச நோய் இருந்தால், அதற்கான சிகிச்சை உங்களுக்கு வழங்கப்படும்.
- சிகிச்சை தேவைப்படும் பாரதூரமான உடல்நலப் பிரச்சினை உங்களுக்கு இருந்தால், இது விடயமாக நீங்கள் சுகாதார நிலையத்திற்கு தெரிவிக்கவும்.

உங்களுக்கு NOAS லிருந்து தகவலும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்

- நீங்கள் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் புகலிட விடயச்செயல்முறை பற்றிய ஒரு தகவல் திரைப்படத்தை NOAS (புகலிடம் கோருவோருக்கான நோர்வேயிய சங்கம்) காண்பிக்கும்.
- நீங்கள் படத்தைப் பார்த்த பின்னர், NOAS ஊழியர் ஒருவர் உங்களுடன் உரையாடுவார். இவ்வுரையாடல் நீங்கள் நன்கு புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் நடாத்தப்படும். இதில் உங்களுக்கு புகலிடம் கோரி விண்ணப்பிப்பதன் விபரம், அத்தோடு உங்களது உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தகவல்கள் வழங்கப்படும். இவ் உரையாடல் உங்களை புகலிட நேர்காணலுக்கு தயார்படுத்தும். புகலிட விண்ணப்ப விடயம் பற்றி நீங்கள் மனதில் கொண்டுள்ள அனைத்துக் கேள்விகளையும் இவ் உரையாடலின் போது கேட்பது முக்கியம்.
- NOAS ஆனது நோர்வேயில் புகலிட விண்ணப்பதாரிகளுக்கான உரிமைகள் குறித்து செயற்படும் ஓர் அரச சார்பற்ற மனித உரிமைச் சங்கமாகும்.
- NOAS இல் பணிபுரிவோர் தகவல் பாதுகாப்புக் கடமையைக் கொண்டுள்ளனர். இதன் பொருள் நீங்கள் NOAS ற்கு கூறும் எதுவும் மேற்கொண்டு UDI, பொலிஸ் அல்லது வேறு யாருக்கும் தெரிவிக்கப்பட மாட்டாது ஆகையால் உங்களுக்கு எக் காரணங்களால் பாதுகாப்பு அவசியம் என்பதை விபரமாக தெரிவிப்பதற்கு நீங்கள் அச்சப்படத் தேவையில்லை.

உங்களுக்கு ஒரு உதவிப் பாதுகாவலர் வழங்கப்படும்

- உங்களது உரிமைகள் தகுந்த முறையில் பேணப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் ஒரு வயது வந்த நபரே உதவிப் பாதுகாவலர் ஆவார். உங்களுடைய பெற்றோர்கள் உங்களுடன் இருந்தால் சாதாரணமாக எந்த முடிவுகளை எடுப்பார்களோ அதே போல உதவிப் பாதுகாவலர் உங்களுக்கான முடிவுகளை எடுக்கலாம். நீங்கள் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களின்றி இங்கு இருக்கும் போது நீங்கள் 18 வயதை அடையும் வரை உதவிப் பாதுகாவலருக்கான உரிமையைக் கொண்டுள்ளீர்கள்.
- உதவிப் பாதுகாவலர் UDI இல் பணிபுரிபவரல்ல. உங்களது புகலிட நேர்காணலின் போது உதவிப் பாதுகாவலர் UDI ற்கு வருவார். நீங்கள் ஒரு புதிய முகாமிற்கு இடம் மாற்றப்பட்டால், உங்களுக்கு ஒரு புதிய உதவிப் பாதுகாவலர் நியமிக்கப்படுவார்.
- உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் வழங்கப்படுவார்.
- ஒரு வழக்கறிஞர் என்பவர் நோர்வேயின் சட்டங்களை நன்கறிந்தவர் அத்தோடு இவர் உங்கள் புகலிட விண்ணப்ப விடயத்திற்கு உங்களுக்கு உதவி வழங்குவார்.
- வெளிப்படையாக 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு தங்களின் UDI உடனான புகலிட நேர்காணலுக்கு முன்னர் இலவச வழக்கறிஞர் உதவி வழங்கப்படும். ஏனையோருக்கு அவர்களின் வயதுப் பரிசோதனை அல்லது புகலிட நேர்காணல் முடிந்த பின் ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்.

UDI உங்களுடன் நேர்முகமாக உரையாடும்

- நீங்கள் எக்காரணங்களால் பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கிறீர்கள் அத்தோடு நீங்கள் தாய்நாட்டிற்குத் மீள் பயணம் செய்தால் அங்கு என்ன நிகழலாம் என நீங்கள் அச்சப்படுகிறீர்கள் UDI ற்கு விளக்கமளிப்பதற்கான மிக முக்கியமான சந்தர்ப்பம் இப்புகலிட நேர்காணலாகும்.
- இவ்வுரையாடலின் போது நீங்கள் யார் என்ற தகவல்கள், உங்கள் குடும்ப விபரங்களையும் அத்தோடு நோர்வேயிற்கான பயணம் போன்ற விடயங்களைத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வுரையாடலின் போது UDI இன் ஊழியர், உங்கள் உதவிப் பாதுகாவலர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் கலந்து கொள்வார்

- உங்களிடையே உரையாடப்படும் விடயங்களை மொழிபெயர்ப்பதை விட மொழிபெயர்ப்பாளர் வேறு கடமைகளிலும் ஈடுபட முடியாது அத்தோடு இந் நேர்முக உரையாடலின் போது கண்டு கொண்ட மற்றும் கேட்ட விடயங்களை பிறருக்கு தெரிவிக்க மொழிபெயர்ப்பாளருக்கு அனுமதியில்லை.

- இவ்வுரையாடலின் போது நீங்கள் யார் என்ற தகவல்கள், உங்கள் குடும்ப விபரங்களையும் அத்தோடு நோர்வேயிற்கான பயணம் போன்ற விடயங்களைத் தெரிவிக்க வேண்டும்.

- இவ்வுரையாடலின் போது UDI இன் ஊழியர், உங்கள் உதவிப் பாதுகாவலர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் கலந்து கொள்வார்.

- உங்களிடையே உரையாடப்படும் விடயங்களை மொழிபெயர்ப்பதை விட மொழிபெயர்ப்பாளர் வேறு கடமைகளிலும் ஈடுபட முடியாது அத்தோடு இந் நேர்முக உரையாடலின் போது கண்டு கொண்ட மற்றும் கேட்ட விடயங்களை பிறருக்கு தெரிவிக்க மொழிபெயர்ப்பாளருக்கு அனுமதியில்லை.

வயதுப் பரிசோதனை

- பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் நோர்வேயில் வயது மிகவும் முக்கியமான அம்சமாகும். 18 வயதுக்குட்பட்டோர் பராயமடையதவராக கருதப்படுவதோடு அவர்களுக்கு பராயம் அடைந்தவர்களை விட மேலதிக உரிமைகள் உண்டு.

- பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்கும் பராயம் அடைந்தோரை விட மேன்மையான உரிமைகள் இருப்பதால், சில சமயங்களில் பராயமடைந்தவர்கள் தாம் 18 வயதுக்குட்பட்டவரென கூறிக் கொள்வதுண்டு. வேறு சிலர் புகலிடம் கோரி விண்ணப்பிக்கும் போது தமது வயதை திடமாக அறிந்திருப்பதில்லை. இதன் காரணமாக 15 இலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்டவர் எனக் கூறிக்கொள்வோரை அநேகமான சந்தர்ப்பங்களில் இவர்களது வயதை பரிசோதனை செய்வதற்கு இவர்களுக்கு சம்மதமா என UDI கேட்டுக் கொள்ளும்.

- இவ்வாறான வயதுப் பரிசோதனையானது ஒரு மருத்துவப் பரிசோதனை அத்தோடு இது உங்கள் வயதை அண்ணளவாக தெரியப்படுத்தும். இப் பரிசோதனைகள் எவ்வாறானவை என்பது பற்றிய மேலதிக விபரங்கள் உங்களுக்கு வழங்கப்படும்.

- உங்கள் வயது பற்றி ஏனைய முறையில் அறிந்து கொள்ளலாமா என UDI கருதும். இதற்கு உதாரணமாக அடையாள அட்டைகள், சான்றிதழ்கள் ஏனைய நாடுகளிலிருந்து பெறும் தகவல்களைக் குறிப்பிடலாம். உங்களது வயதையும் அத்தோடு உங்கள் அடையாளத்தையும் தெளிவு படுத்துவதற்கு நீங்களே உதவுவது முக்கியம்.

- வயதுப் பரிசோதனை சுய விருப்பத்தின் பேரிலானது. உங்களுக்கு பரிசோதனைக்குட்படுத்தப்படுவது விருப்பமில்லை எனில், அநேகமாக நீங்கள் பராயமடைந்தவர் என்றே கணிப்பிடப்படும். இது உங்கள் விண்ணப்பத்திற்கு அர்த்தமுடையதாகும்.

- நீங்கள் உள்நோக்கத்துடன் தவறான வயதைக் கூறி உங்களுக்கு நோர்வேயில் பாதுகாப்புக்கான அவசியமில்லை என UDI கருதினால் நீங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம். இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற்றுவதன் விளைவாக நீங்கள் மறுபடியும் நோர்வே மற்றும் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளுக்கோ எதிர்காலத்தில் பயணம் செய்ய முடியாது.

- நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவரென UDI கருதினால், உங்களுக்கு உதவிப் பாதுகாவலரோ அல்லது வழக்கறிஞரோ வழங்கப்பட மாட்டாது. உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் உங்களுக்கு வழக்கறிஞர் வழங்கப்படுவார்.

UDI யிலிருந்து ஒரு பதிலை நீங்கள் பெறுவீர்கள்: தங்கும் அனுமதி அல்லது நிராகரிப்பு

நீங்கள் நோர்வேயில் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளீர்களா இல்லையா என்பதை உங்கள் வழக்கறிஞர் உங்களுக்குத் தெரிவிப்பார்.

உங்களுக்கு தங்கும் அனுமதி கிடைத்தால் நீங்கள் ஒரு நகரசபையில் குடியமர்த்தப்படுவீர்கள்

- முகாமில் பணியாற்றுபவர்கள் இது பற்றிய மேலதிக விபரங்களை வழங்குவர்.

உங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்டால், நீங்கள் வேறொரு முகாமிற்கு மாற்றப்படலாம்.

- இந்த அனுமதியை நீங்கள் மேன்முறையீடு செய்யலாம். உங்கள் வழக்கறிஞர் இதற்கான உதவியை வழங்குவார்.
- முகாமில் பணியாற்றுபவர்கள் இது பற்றிய மேலதிக தகவல்களை உங்களுக்கு வழங்குவர்.

உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில், இதை நீங்கள் மேன் முறையீடு செய்யலாம்

- வழமையாக, மேன்முறையீட்டின் பதிலுக்காக காத்திருக்கும் காலத்தில் நோர்வேயில் தங்கலாம்.
- நோர்வே அதிகாரிகள் உங்களது புகலிட விண்ணப்பத்தை மீண்டும் ஒரு தடவை பார்க்கும் வண்ணம் ஓர் மேன்முறையீட்டை எழுதுவதற்கு உங்களுக்கு வழக்கறிஞர் உதவுவார்.

மேன்முறையீடும் நிராகரிக்கப்படும் பட்சத்தில், நீங்கள் மீண்டும் தாய்நாட்டிற்கு செல்ல வேண்டும்

- பயண விடயமாக IOM (புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம்) இடம் உதவி பெறலாம். IOM உங்களது பிரயாணச் செலவுகளைச் செலுத்துவதுடன் பயண ஆவணங்களைப் பெறவும் உதவலாம்.
- மீள் பயணம் பற்றிய மேலதிக விபரங்களை முகாமிலுள்ள ஊழியர்கள் உங்களுக்கு வழங்குவார்கள்.

நீங்கள் தாய்நாட்டிற்கு திரும்பச் செல்ல விரும்பினால், இதற்கு உதவி வழங்கப்படும்.

- UDI இல் இருந்து பதில் வருவதற்கு முன்னரோ, உங்களது மேன்முறையீட்டிற்கான பரிசீலனைக் காலத்தின் போதோ, அல்லது புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பின்னரோ நீங்கள் நாட்டிற்கு திரும்பி செல்ல உதவி பெறும் வாய்ப்புண்டு.
- உங்களது உதவிப்பாதுகாவலரும் இதற்கு சம்மதிக்க வேண்டும்.
- உங்களது பயண விடயமாக IOM தான் உதவலாம். IOM உங்களது பயண செலவுகளைச் செலுத்தி பயண ஆவணங்களைப் பெறுவதற்கு உதவலாம்.
- நீங்கள் சுய விருப்ப அடிப்படையில் IOM ஊடாக நாடு திரும்பினால், சில சந்தர்ப்பங்களில் நீங்கள் பணம் பெறுவதற்கான வாய்ப்புண்டு. சில நாடுகளில், நோர்வே அதிகாரிகள் மீள்வாழ்விற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளனர். உங்கள் தாய்நாட்டில் இவ்வாறான ஒரு திட்டம் இருக்குமானால், நீங்கள் மீளச் செல்லும் போது பண உதவியைப் பெறலாம்.
- முகாமிலுள்ள பணியாளர்களுடன் இது விடயமாக நீங்கள் உரையாடி மேலதிக தகவல்களைப் பெறலாம்.

புகலிட நேர்காணலிற்கான முக்கிய அறிவுரைகள்

- நீங்கள் எக்காரணத்திற்காக தாய்நாட்டைவிட்டு வெளியேறினீர்கள் அத்தோடு மறு பயணத்தின் போது எதையிட்டு பயப்படுகிறீர்கள் என நுணுக்கமாகவும் விபரமாகவும் கூறவும்.

- மறுபடியும் நீங்கள் நாட்டிற்கு சென்றால் குறிப்பாக உங்களுக்கு என்ன நிகழும், அத்தோடு உங்களது நேரடி அநுபவங்களை முன் வையுங்கள்.
- வயது பற்றிய கேள்விகளுக்கு விபரமாகவும் நுணுக்கமாகவும் பதிலளிக்கவும்.
- இயன்றவரை நுட்பமாக கூறுங்கள்.
- பிள்ளைகள் இருந்தால், அவர்களது நிலவரத்தையும் அவர்களது அநுபவங்களையும் கூறுங்கள்.
- உங்களுக்கு புரியாவிடில் நேர்காணும் ஊழியரிடம் விளக்கம் கோருங்கள்.
- உங்களது புகலிட விண்ணப்பத்திற்கு அர்த்தமளிக்கவல்ல ஆவணங்கள் இருப்பின், நேர்காணலுக்கு செல்லும் போது அவற்றை எடுத்துச் செல்லவும்.
- உண்மையைக் கூறுங்கள். பிழையான தகவல்களை வழங்குவதால் உங்கள் புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படலாம். நீங்கள் நோர்வேயிலிருந்து வெளியேற்றப்படலாம், இதன் விளைவாக நோர்வே அத்தோடு பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்குள் உள்நுழைய முடியாது.

புகலிட விண்ணப்பதாரி என்ற ரீதியில் உங்களது உரிமைகளும் கடமைகளும்

உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பதற்குரிய கடமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள்

நீங்கள் யார், உங்கள் வயதென்ன என்பதை அறிந்து கொள்வது நோர்வே அரசிற்கு முக்கியம். இதனால் நீங்கள் யார் என்பதை ஊர்ஜிதப்படுத்தக் கூடிய ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிப்பது முக்கியம். உங்கள் தாய்நாட்டின் அரசினால் நீங்கள் தேடப்பட்ட நபராயின், அவர்களுடன் தொடர்பு கொண்டு அடையாள ஆவணங்களை பெற்றுத் தர வேண்டும் என நோர்வே அரசு கோராது.

உங்களது அடையாளத்தில் நோர்வே அரசிற்கு சந்தேகங்கள் இருந்தால், ஏற்படும் விளைவுகள்:

- அவநம்பிக்கை ஏற்படல்
- தங்கும் அனுமதிக்கான சாத்தியத்தைக் குறைக்கும்
- சாதாரணமாக நீங்கள் பெறக் கூடிய உரிமைகளை இழக்க நேரிடும்
- மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் அனுமதி கிடைக்கலாம்

நீங்கள் சரியான தகவலை அளிப்பதற்கு கடமைப்பட்டுள்ளீர்கள்

புகலிட விண்ணப்பதாரி என்ற அடிப்படையில் எக்காரணத்திற்காக நீங்கள் பாதுகாப்பு வேண்டி விண்ணப்பிக்கிறீர்கள் என நீங்கள் விளக்க வேண்டும். இதனால் அவசியமான அத்தாட்சிப்பத்திரங்களை வழங்குவதற்கும், ஒத்துழைப்பதற்கும் உங்களால் இயன்றளவு முயற்சிக்க வேண்டும்.

நீங்கள் பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்க முன் எவர் எவற்றைத் கூறியிருந்தாலும் நோர்வே அரசிற்கு உங்கள் புகலிட விண்ணப்பம் பற்றிய பின்னணி விபரங்களை சரியான முறையில் வழங்குவது முக்கியம். உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதன் விளைவாக நீங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம்.

நீங்கள் புகலிட விண்ணப்பதாரியாக இருக்கும் கால கட்டத்தில் வேலை செய்ய உங்களுக்கு உரிமை இருக்கலாம்

உங்களது அடையாளத்தை ஊர்ஜிதப்படுத்தினால், இது வழமையாக கடவுச்சீட்டினூடாக செய்யப்படுவது, உங்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலத்தில் வேலை செய்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கலாம். உதவிப்பாதுகாவலர் இதற்கு ஆமோதிக்க வேண்டும் அத்தோடு உங்கள் பாடசாலைக் கல்விக்கு இடையூறாக அமையக்கூடாது.

உங்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான உரிமையுண்டு

உங்களது புகலிட விண்ணப்பத்தின் பதிலுக்காக நீங்கள் காத்திருக்கும் காலத்தில், அவசியமான மருத்துவ உதவியைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளீர்கள். நோர்வேயில் உள்ள 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் சாதாரணமாக சுய பங்குக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உங்களுக்கு உளவியல் நிபுணரின் உதவி தேவைப்பட்டால், இதற்கான செலவை UDI செலுத்தலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற முகாமிலுள்ள ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு பாரிய சுகயீனம் இருந்தால் இதை UDI மற்றும் உதவிப்பாதுகாவலருக்கு அறிவித்தல் நன்று.

உங்களது புகலிட விண்ணப்பத்தை வாபஸ் பெற வாய்ப்புண்டு

நீங்கள் எந்த கட்டத்திலும் உங்களது புகலிட விண்ணப்பத்தை வாபஸ் பெறலாம். இவ்வாறான பட்சத்தில் தாய்நாடு திரும்புவதற்கான உதவி கோரி ஒரு விண்ணப்பத்தை நீங்கள் IOM இடம் விண்ணப்பிக்க வாய்ப்புண்டு.

உங்களது குடும்பத்தை அல்லது பெற்றோரை அல்லது குடும்பத்தை கண்டு பிடிக்க உங்களுக்கு உதவி அவசியமா?

உங்களது பெற்றோரை அல்லது குடும்பத்தைக் கண்டு பிடிப்பதற்கு அல்லது தொடர்பு கொள்வதற்கு உங்களுக்கு அவசியம் ஏற்படின் முகாமிலுள்ள ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் குடும்பத்தைக் கண்டு பிடிக்க செஞ்சிலுவை சங்கம் உதவலாம்.

தகவல் பாதுகாப்புக் கடமை

பொலிஸ், UDI மற்றும் UNE என்பவற்றிற்கு தகவல் பாதுகாப்புக் கடமையுண்டு. இதன் பொருள் இவர்கள் உங்கள் புகலிட விண்ணப்ப விடயமாக நீங்கள் வழங்கும் தகவல்களை உங்கள் தாய்நாட்டு அதிகாரிகளுக்கு கூறமுடியாது. உங்களது புகலிட விண்ணப்ப விடயமாக செயலாற்றாத நபர்களுக்கு கூட நீங்கள் கூறியவற்றை இவர்கள் தெரிவிக்க முடியாது. தகவல் பாதுகாப்புக் கடமையை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் உங்களுக்கு எதற்காக பாதுகாப்பு அவசியம் என்பதை விபரமாக விளக்க நீங்கள் பயப்படத் தேவையில்லை.

மொழிபெயர்ப்பாளர், வழக்கறிஞர், முகாமிலுள்ள ஊழியர்கள் அத்தோடு NOAS இற்கும் தகவல் பாதுகாப்புக் கடமையுண்டு. இதன் பொருட்டு இவர்களுக்கு நீங்கள் தெரிவிக்கும் எவ்விடயமும் பிறருக்கு அறிவிக்கப்பட மாட்டாது. UDI, UNE அல்லது பொலிசிற்கும் இவை தெரிவிக்கப்பட மாட்டாது.

முகவரிகள்

பொலிசின் குடிபெயர்வு பிரிவு (POLITIETS UTLENDINGSENHET)

புதிதாக வந்துள்ள புகலிட விண்ணப்பதாரிகளை பொலிசார் பதிவுசெய்வார்கள். நிராகரிப்பு பெற்ற பின்னர் சுய விருப்பத்தில் நோர்வேயை விட்டு வெளியேறாத புகலிட விண்ணப்பதாரிகளையும் பொலிஸசார் பலவந்தமாக நாட்டை விட்டு அழைத்துச் செல்வர்.

அஞ்சல் முகவரி: Postboks 8102 Dep , NO-0032 Oslo, Norway
அலுவலக முகவரி: Christian Krohgs gate 32, 0186 Oslo
தொலைபேசி: +47 22 34 24 00, தொலைநகல்: +47 22 34 24 80
மின்னஞ்சல்: pu@politiet.no

வெளிநாட்டவர் விடய ஆணையகம் (UDI)

என்பது ஓர் அரச நிறுவனம். இதன் சில தொழிற்பாடுகளாவன புகலிடம், குடும்ப மீள் இணைவு, விசா மற்றும் குடியுரிமை ஆகியவற்றின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதாகும்.
UDI ஆனது அகதி முகாமிற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது.

அஞ்சல் முகவரி: Postboks 8108 Dep , NO-0032 Oslo, Norway
அலுவலக முகவரி: Hausmannsgt. 21, 0182 Oslo
தொலைபேசி: +47 23 35 15 00, தொலைநகல்: +47 23 35 15 01
வலைத்தளம்: www.udi.no, மின்னஞ்சல்: ots@udi.no

புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (IOM)

உதவியுடன் சுயவிருப்பத்தின் பேரில் மீள்பயணம் செய்தல் பற்றிய தகவல்

அஞ்சல் முகவரி: Postboks 8927 Youngstorget, 0028 Oslo
அலுவலக முகவரி: Storgata 10a, 2. etg, 0155 Oslo
தொலைபேசி: +47 23 10 53 20, தொலைநகல்: +47 23 10 53 21
மின்னஞ்சல்: osloreturn@iom.int

அலுவலக நேரம்: வாரநாட்கள்: 10:00 – 15:00, வாரவிடுமுறை: மூடப்பட்டிருக்கும்

வெளிநாட்டவர் விவகார மேன்முறையீட்டு நீதிமன்றம் (UNE)

ஆனது UDI இனால் வழங்கப்பட்ட நிராகரிப்பின் மேன்முறையீட்டை பரிசீலிக்கும் நீதிமன்றத்திற்கு நிகரான ஓர் அரச நிருவாக அமைப்பு.

அஞ்சல் முகவரி: Postboks 8165 Dep., NO-0034 Oslo, Norway
அலுவலமுகவரி: Stenersgt. 1B/C, 0050 Oslo
தொலைபேசி: +47 21 08 50 00, தொலைநகல்: +47 21 08 50 01
வலைத்தளம்: www.une.no, மின்னஞ்சல்: postmottak@une.no

நோர்வேயின் செஞ்சிலுவைச் சங்கத்தின் (NORGES RØDE KORS)

கண்டுபிடிக்கும் சேவைகள் போர், சண்டை அல்லது பேரழிவுச் சம்பவம் ஆகியவற்றினால் பிரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களிடையே மீண்டும் தொடர்பு ஏற்படுத்த உதவுகிறது.
UDI இற்கோ அல்லது பிறருக்கோ, உங்களைப் பற்றிய தகவல்களை செஞ்சிலுவைச் சங்கம் அளிப்பதில்லை. இந்தச் சேவை இலவசம்.

அஞ்சல் முகவரி: Postboks 1 Grønland, NO-0133 Oslo, Norway
அலுவலமுகவரி: Hausmannsgt. 7, 0186 Oslo
தொலைபேசி: +47 22 05 40 00
வலைத்தளம்: www.rodekors.no, மின்னஞ்சல்: tracing@redcross.no

NOAS என்பது அரசு சார்பற்ற மனித உரிமைகளுக்கான அமைப்பாகும். இது புகலிடம் கோருபவர்களுக்கு தகவல் மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குகிறது.

நோர்வேயில் புகலிடம் கோரும் உங்களுக்கும் மற்றும் பாதுகாப்பு கோரி விண்ணப்பிப்போருக்குமான முக்கிய தகவல்களை இக்கையேடு கொண்டுள்ளது.

NOAS

புகலிட விண்ணப்பதாரிகளுக்கான நோர்வேயிய சங்கம் (NOAS)
அலுவலக முகவரி: Torggata 22, 0183 Oslo, Norway
அஞ்சல் முகவரி: P. b. 8893 Youngstorget, NO-0028 Oslo, Norway
தொலைபேசி: +47 22 36 56 60, தொலைநகல்: +47 22 36 56 61
மின்னஞ்சல்: www.noas.org, மின்னஞ்சல்: noas@noas.org